மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2023ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20ம் நாள் திங்கட்கிழமை

இ.ம.எண்.06/2023
உள்
அசல் வழக்கு எண்.40/2021

-------------

கண்ணன் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

முருகேசன் யாதவ் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனு 02.09.2023ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 08.11.2023ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.மணிவண்ணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.மைக்கேல்பாரதி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு மனுவுரைகளை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 18 விதி 17-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், மேற்படி எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு பி.வா.சா.1 சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்குவிசாரணை செய்ய அனுமதித்து உத்தரவிடக்கோரி 02.09.2023ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-</u>**

வழக்கானது மனுதாரர்/வாதி நடத்தி வரும் கடையை எதிர்மனுதாரர் சட்டத்திற்கு முரணமாக இடைஞ்சல் செய்யக்கூடாது என்று அசல் வழக்கு

தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் 25.08.2023ம் தேதியன்று பி.வா.சா.1 சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய ஆவணங்களும் கிடைக்காததால் பி.வா.சா.1 சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய இயலாமல் போனது. அதனால் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டுவிட்டது. மேற்படி செயலானது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமாய் ஏற்பட்ட ஒன்றாகும். அதனால் மேற்படி தேதியில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் முடித்துவைக்கப்பட்ட பி.வா.சா.1 சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்குவிசாரணை செய்ய அனுமதித்து உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) **<u>எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:-</u>**

மனுதாரர் அசல் வழக்கினை காலம் கடத்த வேண்டுமென்ற நோக்கத்தில் தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் கடந்த 25.08.2023ம் தேதி எதிர்மனுதாரரை குறுக்குவிசாரணை செய்வதற்காக வாய்தா ஏற்பட்டிருந்தது. அன்றைய தினம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் அழைப்பு நேரத்திலேயே ஆஜராகியிருந்தார். ஆனால் மனுதாரர் தரப்பில் வழக்கு குறித்து எடுத்துரைக்க மனுதாரர் ஆஜராகவில்லை. மனுதாரருக்காக அவரது வழக்கறிஞரும் ஆஜராகவில்லை என்பதால் வழக்கானது பின்பு எடுப்பதற்கு ஒத்தி வைக்கப்பட்டு, மாலை 4 மணிக்கு மீண்டும் அழைத்த போது எதிர்மனுதாரர் தரப்பினர் மட்டுமே நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர். மனுதாரர் தரப்பில் யாரும் ஆஜராகவில்லை. யாரும் ஆஜராகாததால் அன்றைய தினம் மனுதாரருக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டு எதிர்மனுதாரரின சாட்சியம் முடிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் கடந்த 25.08.2023ம் தேதி நீதிமன்றத்தில் ஏன் ஆஜராகவில்லை என்பதற்கு எவ்வித காரணமும் மனுதாரர் தரப்பில் முன் நிறுத்தி வைக்கப்படவில்லை என்பதலாயே மனுதாரர் தாக்கல் செய்த மனுவினை தள்ளுபடி செய்யப்பட வேண்டும். மனுதாரர் எந்த ஆவணம் கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டு கூறவில்லை. எதிர்மனுதாரரை அலைக்கழிப்பு செய்ய வேண்டுமென்று அன்றைய நாள் முழுவதும் எதிர்மனுதாரரை காத்திருக்க வைத்துவிட்டு நீதிமன்றத்தில் வராமல் நீதிமன்ற நேரத்தையும் வீணடித்துவிட்டார்.

எனவே, மனுதாரரின் மனு எதிர்மனுதாரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5) மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் இல்லை.

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

<u>**7) தீர்வு:-**</u>

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர்உரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு பி.வா.சா.1 சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்குவிசாரணை செய்ய அனுமதித்து உத்தரவிடக்கோரி 02.09.2023ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரரால் தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும் நஷ்டமும் ஏற்படக் கூடும். ஒரு வழக்கைப் பொறுத்து தரப்பினரை விசாரணை செய்ய வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும். மனுதாரருக்கு தாவா வழக்கைப் பொறுத்து அவரது சாட்சியத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, அவரது தரப்பை நிரூபணம் செய்வதற்கு மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு வழங்க வேண்டியது அவசியமாய் உள்ளது. இருப்பினம் இந்த வழக்கில் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காலவிரையம் மற்றும் இதர விரையங்களை கருத்திற்கொண்டு, மனுதாரர் எதிர்மனுதாரருக்கு ரூ.300/- ஐ செலவு தொகையாக வரும் 27.11.2023ம் தேதியன்றோ அதற்கு முன்பாகவோ செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா- 27.11.2023

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள், மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு பி.வா.சா.1 சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்குவிசாரணை செய்ய அனுமதித்து உத்தரவிடக்கோரி 02.09.2023ம் தேதி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து மனுதாரர் எதிர்மனுதாரருக்கு ரூ.300/-ஐ செலவு தொகையாக வரும் 27.11.2023ம் தேதியன்றோ அதற்கு முன்பாகவோ செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா- 27.11.2023

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதி தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.